**Petition under Right to Information Act, 2005**

Sumana Narayanan
New #246 (Old #277B), TTK Road (J.J. Road), Alwarpet,
Chennai - 600 018.

Chennai
22.03.19

**PIO,**
**Police Department,**
**Pudukottai.**

Dear Sir,
**Sub: Seeking Information under RTI Act, 2005**

I am an Indian citizen and I seek the following information under the Right to Information Act, 2005. I have affixed the fees of Rs. 10 court fees stamp on this letter. I am also ready to pay any other charges that I am required to pay under the Act for photocopies, CDs, etc. Kindly provide the information sought in soft copy (such as CD/DVD) if possible.

Kindly provide the following information for Pudukottai district:

1. Date of formation/creation of District Road Safety Council (DRSC)
2. Terms of Reference for the DRSC
3. Procedure for nomination and confirmation of consumer groups, NGOs representatives as members
4. Number of consumer group/NGO nominations received from 2013 to 2019; number of consumer group/NGO members appointed from 2013 to 2019 with names, contact details and duration of term
5. Duration for which members are appointed and when term of current members will end
6. Details of honorarium/remuneration/reimbursement/facilities provided, if any, for members of the DRSC
7. Procedure to select road safety works to be carried out and procedure followed to allocate funds towards these works

Thanking you,

Sumana Narayanan

6 MAY 2019

## காவல்துறை

அனுப்புநர்:

பொது தகவல் அலுவலர்/
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
(தலைமையிடம்), புதுக்கோட்டை.

பெறுநர்:

பொது தகவல் அலுவலர் மற்றும்
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்,
(பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
புதுக்கோட்டை.

---

**ந.க.எண்.181/த.அ.உ .ச/புதுகை/2019, நாள். 01.05.2019**

பொருள் : தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005-ன் கீழ் மனுதாரர் திரு. சுமுணா நாராயணன், ஆல்வார்பேட்டை, சென்னை என்பவர் கோரிய கேள்வி எண் 1 முதல் 6 வரையிலான தகவல்கள் தங்கள் அலுவலகம் சம்பந்தப்பட்டதால் 6(3)-ன்படி அனுப்புதல் - தொடர்பாக.

----------

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் கீழ் மனுதாரர் திரு. சுமுணா நாராயணன், புதிய எண். 246, பழைய எண். 277B, TTK ரோடு, (J.J. ரோடு), ஆல்வார்பேட்டை, சென்னை - 18 என்பவர் 26.03.19-ம் தேதியிட்டு அனுப்பியுள்ள விண்ணப்பத்தை பரிசீலனை செய்ததில் மனுதாரர் கோரியுள்ள கேள்வி எண் 1 முதல் 6 வரையிலான தகவல்கள் தங்கள் அலுவலகம் சம்பந்தப்பட்டதால், மேற்படி மனுதாரரின் மனுவை பொது தகவல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், புதுக்கோட்டை மாவட்டம் அவர்களின் பார்வைக்கு மனுதாரரிடம் இருந்து வரப்பட்ட அசல் மனுவை மேல் நடவடிக்கைக்காக தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005 பிரிவு 6(3)-ன்படி அனுப்பி வைக்கப்படுகிறது. இம்மனு மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரருக்கு தகவல் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு: மனுதாரரின் 26.03.2019-ம் தேதியிட்ட அசல் மனு.

பொது தகவல் அலுவலர்/
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
(தலைமையிடம்), புதுக்கோட்டை.

நகல்:

திரு. சுமுணா நாராயணன், புதிய எண். 246, பழைய எண். 277B, TTK ரோடு, (J.J. ரோடு), ஆல்வார்பேட்டை, சென்னை - 18

ந.க.எண்:182/த.அ..உ.ச/புதுகை/2019
நாள்: 01.05.2019

பொது தகவல் அலுவலர்/
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
(தலைமையிடம்), புதுக்கோட்டை.

**தகவல் அறியும் சட்டம் 2005-ன் கீழ் மனுதாரருக்கு தகவல் அளிப்பது சம்மந்தமாக**

பொருள் : தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் கீழ் மனுதாரர் திரு. சுமுணா நாராயணன், புதிய எண். 246, பழைய எண். 277B, TTK ரோடு, (J.J. ரோடு), ஆல்வார்பேட்டை, சென்னை - 18 என்பவருக்கு பதில் அளிப்பது சம்பந்தமாக.

----------

மனுதாரராகிய தாங்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் கீழ் அனுப்பியுள்ள புகார் மனுவில் கோரிய விபரங்களுக்கான பதிலறிக்கை நிர்வாக அலுவலர் (பொது), மாவட்ட காவல் அலுவலகம் மற்றும் காவல் துணைக்கண்காணிப்பாளர், மாவட்ட குற்ற ஆவண காப்பகம், புதுக்கோட்டை ஆகியோர்களிடமிருந்து பெற்று பதிலறிக்கையின் நகல் இத்துடன் இணைக்கப்படுகிறது.

பொது தகவல் அலுவலர்/
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
(தலைமையிடம்), புதுக்கோட்டை.

பெறுநர்:

திரு. சுமுணா நாராயணன்,
புதிய எண். 246, பழைய எண். 277B,
TTK ரோடு, (J.J. ரோடு),
ஆல்வார்பேட்டை,
சென்னை - 18

PUBLIC INFORMATION OFFICE
PUDUKKOTTAI DISTRICT POLICE
PUDUKKOTTAI
DATE: 12-04-19

ந.க.எண்: G1/ 10502 / 2019.

மாவட்ட காவல் அலுவலகம்,
புதுக்கோட்டை மாவட்டம்,
புதுக்கோட்டை

நாள்: 12.04.2019.

அலுவல்சாரா குறிப்பு

பொருள்: காவல் - புதுக்கோட்டை மாவட்டம் - தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005-ன் கீழ் மனுதாரர் திருமதி.சுமுணா நாராயணன், புதிய எண். 246, பழைய எண். 277B, TTK ரோடு, ஆழ்வார்பேட்டை, சென்னை-18 என்பவர் கோரிய தகவல்களுக்கு பதில் அளித்தல் - தொடர்பாக.

பார்வை: தங்கள் அலுவலக மேல்வரைவு ந.க.எண்: 182/ RTI / PDK / 2019, நாள்: 05.04.2019.

******

மனுதாரர் திருமதி.சுமுணா நாராயணன் என்பவர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 5(4)-ன் கீழ் அனுப்பப்பட்ட மனுவிற்கு கீழ்கண்டவாறு பதில் அளிக்கப்படுகிறது.

மேற்படி மனு தொடர்பாக எல் 1 இருக்கையாளர் வழங்கிய பதிலறிக்கை இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

(V. சீனிவாசன்)
நிர்வாக அதிகாரி (பொது),
மாவட்ட காவல் அலுவலகம்,
புதுக்கோட்டை மாவட்டம்

12/4/19 12/4/19

பெறுநர்:

பொது தகவல் அலுவலர் மற்றும்
கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (தலைமையிடம்)
புதுக்கோட்டை மாவட்டம்.

ந.க. எண் எல்1/10861/2019

**ஜி1 இருக்கையின் அலுவல் சாரா குறிப்பு ந.க. எண் 10502/2019 -ற்கான பதிலறிக்கை**

திருமதி. சுமுணா நாராயணன், புதிய எண். 246, பழைய எண். 277B, TTK ரோடு, ஆழ்வார்பேட்டை, சென்னை-18 என்பவர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரிய விபரங்களுக்கு கீழ்க்கண்டவாறு பதிலளிக்கப்படுகிறது.

**வினா எண்** : 1 முதல் 6 வரையிலான வினாவில் கேட்கப்பட்ட பொருள் தொடர்பாக எல்-1 இருக்கையில் கடிதங்கள் ஏதும் பெறப்படவில்லை. மேலும் நெடுஞ்சாலை பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகள் மாவட்ட குற்ற ஆவணக் கூடம் (DCRB)-ல் மேற்கொள்வதால் விபரம் கோர கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**வினா எண்** : 7 – மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு சாலை பாதுகாப்பு உபகரணங்கள் வேண்டி கருத்துரு இவ்வலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்டு, இம்மாவட்டத்திற்கு போக்குவரத்து ஆணையர், சென்னை அவர்களிடமிருந்து சாலை பாதுகாப்பு நிதியானது ஒதுக்கீடு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சியர் மூலமாக இம்மாவட்ட காவல் துறைக்கு சாலை பாதுகாப்பு உபகரணங்கள் மட்டும் கொள்முதல் செய்ய ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது. அத்தொகைக்கு நிறுவனங்களிடமிருந்து போட்டி விலைப்புள்ளிகள் பெறப்பட்டு, கொள்முதல் செய்யப்படுகிறது. என்ற விபரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

11/04/19. 11/04/19.

INFORMATION OFFICER
PUDUKKOTTAI DISTRICT POLICE
PUDUKKOTTAI
DATE: 01/05/19
ADDL. SUPDT. OF POLICE (CRIME)

அனுப்புநர்:
காவல் துணைகண்காணிப்பாளர்,
மாவட்ட குற்ற ஆவணக்கூடம்,
புதுக்கோட்டை.

பெறுநர்:
பொதுதகவல் அலுவலர்/
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
தலைமையிடம் புதுக்கோட்டை.

ந.க.எண்: 101/**D5**/மா.கு.ஆ.கூ/புதுகை/**2019**நாள்: 01.05.2019

பொருள்: ந.க.எண்:**182/RTI/PDK/2019 dt:01.05.2019** ன்படி தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பதிலறிக்கை அனுப்புதல் தொடர்பாக.

**@@@@@@@@@**

திருமதி. சுமுணா நாராயணன், புதிய எண்:246, பழைய எண்:277**B**, **TTK** ரோடு, ஆழ்வார்பேட்டை, சென்னை-18 என்பவர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரிய வினாக்களுக்கு கீழ்க்கண்டவாறு பதிலுரை வழங்கப்படுகிறது.

வினா எண்: 1 முதல் 6 வரையிலான கேட்கப்பட்டுள்ள கேள்விக்களுக்கான பதிலறிக்கையை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் உள்ள சம்பந்தப்பட்ட பிரிவில் பெற்று கொள்ள வேண்டப்படுகிறது.

காவல் துணைகண்காணிப்பாளர்,
மாவட்ட குற்ற ஆவணக்கூடம்,
புதுக்கோட்டை.